Process Safety Beacon
Messages for Manufacturing Personnel
www.aiche.org/ccps/process-safety-beacon

An AIChE Technology Alliance CCPS Center for Chemical Process Safety
aiche.org/ccps

This issue sponsored by
ioMosaic®
Minimizing risk. Maximizing potential.®
www.iomosaic.com

March 2024

# செயல்முறையில் ஏற்படும் சீர்குலைவில் கவனம் தேவை



## என்ன நடந்தது ?

ஒரு செயல்முறை திடீரென்று ஒழுங்கற்ற முறையில் செயல்பட்டு நின்று விடுகிறது. இதற்கு காரணம் ஒரு கருவி சார்ந்த செயலிழப்பாக கூட இருக்கலாம், ஆனால் அதற்கான உண்மையான காரணம் என்ன ?

திட்டமிடப்படாத பணிநிறுத்தத்தின் போது, நாம் செயல்பாட்டை மறுதொடக்கம் செய்வதில்தான் கவனம் செலுத்துவோம். எனவே செயல்பாட்டினை திரும்ப ஆரம்பிக்க வேண்டிய அழுத்தத்தால், முழுமையான சரிசெய்தலை செய்வதில்லை. "கடைசி முறை சரிசெய்ததை திரும்ப செய்யுங்கள்" என்பதுதான் விரைவான தீர்வாக இருக்கும். இது மற்ற பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும்.

மேலும், இயல்பான செயல்பாடுகளும் தடைபடும் . எனவே மறுதொடக்கம் செய்ய கட்டுப்பாட்டு அறையில் கூடுதல் நபர்கள் இருப்பதற்கு வாய்ப்பு உள்ளது. பணிநிறுத்தத்திற்கு வழிவகுத்த நிகழ்வுகளின் காரணங்களை அறிய, பராமரிப்புப் பணியாளர்கள் கேள்விகளைக் கேட்கலாம். களப் பணியாளர்களுக்கும் தரவு அல்லது உபகரண நிலை பற்றிய பல கோரிக்கைகள் வரலாம் .

சிக்கல்களை தீர்ப்பதற்க்கும், செயல்பாட்டிற்குத் மீண்டும் திரும்புவதற்கும் பாதுகாப்பை கருத்தில் கொண்டு முயற்சிக்கும் போது கூடுதல் நேரம் தேவைப்படுகிறது. பணிநிறுத்தத்திற்கு முன்னும் பின்னும் செயல்முறையில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கலாம் எனவே பகுப்பாய்வின் மூலம், செயல்பாடுகளை சரிசெய்யும் போதும் மற்றும் செயல்பாடுகளை மறுதொடக்கம் செய்யும் போதும் கவனிக்கப்பட வேண்டிய அபாயகரமான சூழ்நிலைகளை அடையாளம் காண முடியும்.

## உங்களுக்கு தெரியுமா ?

- பெரும்பாலான செயல்முறைகள் , செயல்முறை சீர்குலைவிற்க்கான காரணத்தைக் கண்டறிந்து அதைச் சரிசெய்வதற்கான தீர்வுகளை வழங்கும் சரிசெய்தல் வழிகாட்டியைக் கொண்டுள்ளன.
- சிக்கலைத் தீர்க்கும் வழிமுறைகள், பழுதிற்க்கான காரணத்தை எவ்வாறு பாதுகாப்பாகக் கண்டறிவது, மற்றும் சிக்கலைத் தீர்க்கும் போது எவ்வாறு பாதுகாப்பாக இருப்பதைப் பற்றியும் கூற வேண்டும்
- அவசரகால பணிநிறுத்தம் மற்றும் சாதாரண பணிநிறுத்த நடைமுறைகள், வெவ்வேறு செயல்முறை இயக்கங்களை கொண்டு இருக்கும். செயல்முறை நிறுத்தப்பட்ட பிறகு, உபகரணங்களின் நிலை மற்றும் வால்வு நிலைகள் ஒரே மாதிரியாக இருக்காது
- எந்தவொரு காரணத்திற்காகவும் நிறுத்தப்பட்ட ஒரு செயல்முறையில், செயல்பாட்டுத் தயார்நிலை மதிப்பாய்வு அவசியமாகிறது, இது செயல்பாட்டினை தொடங்கும் முன் நடத்தப்படும் பாதுகாப்பு மதிப்பாய்வை (PSSR) விட விரிவானது.
- அவசரகால பணிநிறுத்தம் மற்றும் சாதாரண பணிநிறுத்தத்திற்குப் பிறகு ஒரு செயல்முறையை மறுதொடக்கம் செய்வதற்கு நிறுவனங்கள் வெவ்வேறு நடைமுறைகளைக் கொண்டிருக்கின்றன.

## உங்களால் என்ன செய்ய முடியும் ?

- கட்டுப்பாட்டு அமைப்புகள் எவ்வாறு செயல்படுகின்றன மற்றும் செயல்பாட்டின் பாதுகாப்பான இயக்க அளவீடுகள் மற்றும் செயல்முறை பணிநிறுத்த அளவுகோல்கள் என்ன என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.
- உங்கள் செயல்முறைகளுக்கான சரிசெய்தல் வழிமுறைகளை எவ்வாறு விரைவாக அணுகுவது என தெரிந்து கொள்ளுங்கள். அவ்வப்போது சரிசெய்யும் வழிமுறைகளையும் செயல்முறை சீர்குலைவினை கண்டறிவதற்கான படிகளையும் மதிப்பாய்வு செய்யுங்கள்.
- அபாயம் குறித்த மதிப்பாய்வுகளின் போது, செயல்முறை தோல்விகளுக்கு சாத்தியமான காரணங்கள் மற்றும் விளைவுகளைக் கண்டறியுங்கள் . சில அளவீடுகளில் ஏற்படும் விலகல்கள் ஒரு தரம் சார்ந்த சிக்கலை விட அதிகப்படியாக இருக்கலாம்; அவைகள் பாதுகாப்பற்ற சூழ்நிலையை ஏற்படுத்தலாம்..
- செயல்முறை இயக்கத் தயார்நிலை சரிபார்ப்புப் பட்டியலைப் பின்பற்றி, தொடங்கும் முன் அனைத்து கூறுகளும் சரியான நிலையில் உள்ளனவா என்பதனை சரிபாருங்கள் .

**செயல்முறை சீர்குலைவுகள் அவசரமின்றி சிந்திக்க வேண்டிய நேரமாகும்!**